1974 மார்ச் 13]

நடுவர் முடிவிற்கு விடப்பட்ட தொழில் தகராறுகள்.

* 408—வினு.—திரு. தி.சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

1973-74-ல் சென்னை நகரில் உள்ள ஹோட்டல்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளுள் எத்தனை இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் சட்டப்படி மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஐந்து.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த டிரிபியூனலுக்கு விடப்பட்ட தொழில் தகராறுகளிலே எத்தனை தீர்ந்திருக்கிறது—தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது ? தீர்ப்பு வழங்கப்படாமல் மிச்சம் இருப்பவை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழில் தகராறு தீர்ப்புக்கு விடப்பட்டவை மொத்தம் 31. இதுவரையிலே தீர்க்கப்பட்டவை 29. மீதமுள்ளவை 2.

தீப்பெட்டித் தயாரிப்புப் பிரிவு.

* 409—வினு : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக தீப்பெட்டித் தொழிற்சாலை திறக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருவண்ணுமலை வளர்ச்சி மாவட்டம், புத்தியாவரத்தில் குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சித் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருள்கள், இரசாயனப் பொருள்கள் முதலியவற்றைக் கொள்முதல் செய்தல் போன்ற தொடக்க ஏற்பாடுகள் பெரும்பாலும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. உரிமம் வழங்குவதற்காக வேலூர் மாவட்ட வருவாய் அதிகாரி மாவட்ட சுகாதார அதிகாரியின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர். உரிமம் பெறப்பட்டவுடன், இப்பிரிவு உற்பத்தியைத் தொடங்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலையைத் துவங்குவதற்கு எவ்வளவு செலவாகும் ? இந்தப் பணி எப்பொழுது முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. 1973–74-வது ஆண்டில் புதிதாக 6 பிரிவுகளைத் திறக்க வேண்டுமென்று கதர்